உ

சிவமயம்



யாழ் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும்

இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் திரு. கைலாசபிள்ளை சுந்தரலிங்கம் அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

24.02.2017

In Loving Memory of

## Late Mr Kailasapillai Suntharalingam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்.
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி உருகி ஒளியூட்டி.
ஆலமரமாக எம் குடும்பத்திற்கு நிழல் பரப்பி
எம்மையெல்லாம் அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
வளர்த்து நல்வழிகாட்டி.
நற்கல்வியூட்டி. உறுதுணையாக இருந்து
சொந்த பந்தங்கள் அனைவருக்கும் பக்கபலமாய் இருந்து
சீரும் சிறப்புடன் வாழவைத்து.
மனிதருள் மாணிக்கமாய்.
குடும்பத்தின் தலைவராக. தந்தையாக மனம் பல
மாண்புடன் பரப்பி இனமெல்லாம் இன்புடன் வாழ
ஏற்ற நற்பணிகள் காத்து வையத்துள்
என்றும் நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினிய மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

**என்றும் நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திரு **கைலாசபிள்ளை சுந்தரலிங்கம்** அவர்கள்

அன்னை மடியில் 05 * 06 * 1954



ஈசன் அடியில் 25 * 01 * 2017

## திதி வெண்பா

துர்முகி வருட தைத்திங்கள் இருபத்தைந்தாம் நாள்
பார்பகழ் அபரபக்க திரயோதசி திதியதனில் - மாண்புமிகு
சுந்தரலிங்கம் அவர்கள் பந்தமதை நீக்கி
சிவனடிக்கே சென்றார் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் வணக்கம்

மூஷிக வாகன மோதக ஹஸ்த
ஸாமர கர்ண, விளம்பித சூத்ர
வாமன ரூப, மகேஸ்வர புத்ர
விக்ந விநாயக, பாத நமஸ்தே.

## தேவாரம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டு முடனே
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

## தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககி லீர்
கொடுமை பலசெய் தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம் படியே
குடரோடு துடக்கி முடக்கி விட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டா னந்துறை அம்மாளே.

பித்தாபிறை சூடி பெரு மானேயருளாளா
எத்தான்மற வாதே நினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
-நல்லூ அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனெனலாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி ஓம் நமச்சிவாய
புயங்களே மயங்கு கின்றேன்
போற்றி ஓம் நமச்சிவாய
புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றி ஓம் நமச்சிவாய
புறம் எனப் போக்கல் கண்டாய்
போற்றி ஓம் நமச்சிவாய
சயசய போற்றி போற்றி

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பு மறியும் பரிசு
நாம் பல்லாண்டு கூறுதுமே

## திருமந்திரம்

முடிவும் பிறப்பும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அரண் நெடி நாடில்
இடியும் முழக்கமும் ஈசன் உருவம்
கடிமலர்க் குன்றம் மலையதுலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## பெரியபுராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவி லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமைந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல்லிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச் நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவினை லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயத்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
இருள்வெளி யிரண்டிக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

திருவாசகச்சிறப்பு வெண்பா

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அருள்மிகு அபிராமிப்பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

## கணபதி காப்பு

தாரமரர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்(து) உமைமைந்தனேஉல(கு) ஏழும்பெற்ற
சீரபி ராமி அந் தாதிஎப்போதும்என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியேநிற்கக் கட்டுரையே

## நூல்

### யோகத்தின் முதற்படிக்கு

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமிஎன்றன் விழுத்துணையே 1

### முக்கால ஞானமும் முழுமையாகப் பெற

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்டவேரும் பனிமலரப்பூங்
கணையும் கரும்புச் சிலையுமென்பாசாங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரியாவ(து) அறிந்தனமே. 2

### தளையறுக்க

அறிந்தேன் எவரும் அறியாமறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர்பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நர குக்குறவாய மனிதரையே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானம் பெறுவதற்கு

மனிதரும் தேவரும் மாயாமுனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமேகொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎன்நாளும் பொருந்துகவே. 4

## கொடிய துன்பங்கள் நீங்க

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு) அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரிபாதம் என் சென்னியதே 5

## பெறற்கரிய கீர்த்திகளைப் பெற

சென்னிய(து) உன்பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன்கூடி முறை முறையே.
பன்னிய(து) என்றும் உன் றன்பரமாகம பத்ததியே. 6

## சித்தம் சபலமடையாதிருக்க

ததியுறு மத்திற் சுழலும் என்ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண்டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடி யாய்சிந்துரானன சுந்தரியே 7

## மிருக இச்சைகளினின்றும் விடுபட

சுந்தரி எந்தை துணைவிஎன்பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாதகன்னிகை ஆரணத்தோன
கந்தரி கைத்தலைத் தாள்மலர்தாள்என் கருத்தனவே 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசிப்பிணி போக்க

கருத்தன எந்தைதன் கண்ணனவண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும்அம்மேவந்தென் முன்நிற்கவே. 9

## முத்திநிலை அறிய

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த்தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும் பொருளே அருளே உமையே இமயத்(து)
அன்றும் பிறந்தவளே அழியாமுத்தி ஆனந்தமே 10

## என்றும் இன்பங்கள் தழைக்க

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்தமான வடி(வு) உடையாள் மறைநான்கினுக்கும்
தானந்த மானசாணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான்முடிக் கண்ணியதே 11

## தியானயோகத்தில் வெற்றியடைய

கண்ணிய(து) உன்புகழ்கற்ப(து) உன்நாமம் கசிந்து பத்தி
பண்ணிய(து) உன்இருபாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணிய(து) உன்னைநயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏ(து) என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே 12

## தாயைச் சரணடைய

பூத்தவளே புவனம்பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவளே உன்னைஅன்டி மற்றோர்தெய்வம் வந்திப்பதே 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரமானந்த சுகம் பெற

வந்திப் பவர்உன்னை வானவர்தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர்நல் திசைமுகர்நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளி தாம்எம்பிராட்டி நின்தண்ணளியே 14

### இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெற

தண்ணளிக்கென்றுமுன் னேபலகோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்மதி வானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக்கும் சொல் பரிமளயாமளைப் பைங்கிளியே. 15

### அனைத்தையும் அறியும் ஆற்றல் பெற

கிளியே கிளைஞர் மனத்தேகிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியெ வெளிமுதல் பூதங்களாகி விரிந்தஅம்மே
அளியேன் அறிவளவிற்(கு) அளவானது அதிசயமே. 16

### மங்கையர் அழகு நலம்பெற

அதிசய மான வடி(வு) உடையாள் அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசயமாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாமபாகத்தை வவ்வியதே 17

### மரணத்தை வெல்ல

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும்போது வெளிநிற்கவே. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்ரீசக்ர வழிபாட்டின் போது

வெளிநின்ற நின்திரு மேனியைக் பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டதில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும்மேவி உறைபவளே. 19

### கபடில்லா நண்பர்களைப் பெற

உறைகின்ற நின்திருக் கோயில்நினகேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோமுடியோ அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ கஞ்சமோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே. 20

### பெண்மை நலங்கள் சிறக்க

மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகலகலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கம் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலிசெய்யாள் வெளியாள் பசும்பெண்கொடியோ. 21

### பிறவா வரம்பெற

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமேபனி மால்இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்(து) இங்(கு) இனிப்பிறவாமல்வந்(து) ஆண்டுகொள்ளே 22

### சத்திய உறவுகளைக்காண

கொள்ளேன் மனத்தில்நின் கோலம் அல்லா(து) அன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக் (கு)
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பேஉள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீராத நோய்கள் தீர

மணியே மணியின் ஒளியெஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தேஅமரார் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே. 24

## எண்ணியவை எண்ணியபடி எய்த

பின்னே திரிந்(து) உன் அடியாரைப்பேணிப்பிறப்பறுக்க
முன்னேதவங்கள் முயன்றுகொண்டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மறவாமல் நின்(று) ஏத்துவனே 25

## நாவன்மை பெற

ஏத்தும் அடியவர் ஈரேழுல கினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே மணம்நாறும் நின்தாள் இணைக்(கு)என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே. 26

## மனமயக்கம் மாற

உடைத்தனை வஞ்சப் பிறவியைஉள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத்(து) அழுக்கை எல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே.. 27

## ஞானமும் முத்தியும் கைகூட

சொல்லும் பொருளும் எனநடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவ நெறியும் சிவலோகமும் சித்திக்குமே. 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்டமா சித்திகளை அடைய

சித்தியும் சித்தி தருந்தெய்வமாகித் திகழும் பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29

## அச்சம் அகற்ற

அன்றே தடுத்(து) எ(ன்)னைஆண்டு கொண்டாய்கொண்டது
அல்லவென்கை
நன்றே உனக்(கு) இனி நான் என்செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுருவே அருவேஎன் உமையவளே 30

## மோக மாயை விலக

உமையும் உமையொரு பாகனும்ஏக உருவில்வந்திங்கு
எமையும் தமக்கன்பு செய்யவைத்தார் இனி எண்ணுதற்குச்
சமையங் களுமில்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. 31

## விபத்துக்கள் நேராதிருக்க

ஆசைக் கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லப்பட இருந்தேனைநின் பாதம் என்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டு கொண்ட
நேசத்தை என்சொல்லுவேன் ஈசர்பாகத்து நேரிழையே. 32

## எப்போழுதும் தாயின் துணை கிடைக்க

இழைக்கும் வினைவழியே இடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்(து) அஞ்சல் என்பாய் அத்தர்
சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலையாமளைக் கோமளமே
உழைக்கும் பொழு(து) உ(ன்)னையே அன்னையே
என்பன் ஓடிவந்தே 33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பயிர் வளர, பொன் கொழிக்க

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான்உலகம்
தந்தே பரிவோடு தான்போய்இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணிஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

### வானோர் அடையாப் பேறுபெற

திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்துமோ தரங்கக்கடலுள்
வெங்கட் பணியணைமேல் துயில்கூரும் விழுப் பொருளே. 35

### வாணிபத்திலே வளங் காண

பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வருந்தெருளே என்மனத்து வஞ்சத்(து)
இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்றன்
அருளே(து) அறிகின்றிலேன் அம்புயாதனத்(து) அம்பிகையே 36

### ஆடை அணிகலன்கள் கிடைக்க

கைக்கே அணிவது கன்னலும்பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்துமாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும்பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே. 37

### இந்திர போகம் அடைய

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே. 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகால மரணத்தைத் தடுக்க

ஆளுகைக் (கு)உன்றன் அடித்தாமரைகள் உண்(டு)அந்தகபால்
மீளுகைக் (கு) உன்றன் விழியின்கடையுண்டு மேல் இவற்றின்
மூளுகைக்(கு) ஏன்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்புதொடுத்த வில்லான்பங்கில் வாணுதலே 39

### நல்வினைப் பயன்கள் முழுமை பெற

வாணுதல் கண்ணியை விண்ணவர்யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணியஎம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்(கு)அண்ணியவள் அல்லாதகன்னியைக்காணும் அன்பு
பூணுதற்(கு)எண்ணியஎண்ணம் அன்றோமுன்செய்புண்ணியமே 40

### கணவன் மனைவி உறவு கனிய

புண்ணியம் செய்தனமே மனமேபுதுப் பூங்குவளைக்
கண்ணியம் செய்ய கணவரும்கூடிநம் காரணத்தால்
நண்ணி இங்கேவந்து தம்மடியார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே. 41

### பொதுமக்கள் ஆதரவைப் பெற

இடங்கொண்டு விம்மிஇணை கொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கைமலை கொண்(டு)இறைவர் வலிய நெஞ்சை
நடங் கொண்ட கொள்கை நலங்கொண்டநாயகி நல்லரவின்
படங் கொண்ட அல்குல் பணிமொழி வேதப்பரிபுரையே. 42

### பகை நீங்க

பரிபுரச் சீறடி பாசாங்குசை பஞ்சபாணி இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துரமேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனிஇறைவர் செம்பாகத் (து) இருந்தவளே. 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனைமாட்சி பெற

தவளே இவள் எங்கள் சங்கரனார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்(கு) அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும்மேலை இறைவியும் ஆம்
துவளேன் இனியொருதெய்வமுண்டாகமெய்த் தொண்டு செய்தே 44

### பாவவினைகள் பற்றாதிருக்க

தொண்டு செய்யாது நின்பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசடியேன்
கண்டு செய்தால் அதுகைதவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே பின்வெறுக்கையன்றே 45

### எந்நிலையிலும் இறையருள் கூட

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றோ புதுநஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யுனும்யான் உன்னை வாழ்த்துவனே 46

### யோகத்தில் உயர

வாழும்படியொன்று கண்டு கொண்டேன் மனத்தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும்படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே 47

### உடல் பற்றினை விட

சுடரும் கலைமதிதுன்றும் சடைமுடிக்குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப்பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் நோயும் குரம்பையிலே 48

### மரணபயத்தினின்றும் விடுபட

குரம்பை அடுத்துக் குடிபுக்கஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்துமறுகும் அப்போதுவளைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்(து) அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய்நின்ற நாயகியே 49



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறையருள் கைகூட

நாயகி நான்முகி நாரா யணி கைநளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரிசாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகிசூலினி மாதங்கி என்(று)
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண் நமக்கே. 50

## பிறப்பு இறப்பில்லாப் பெருவாழ்வு பெற

அரணம் பொருள் என்று அருள் ஒன்றிலாத அசுரர்தங்கள்
முரண் அன்(று) அழியமுனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்தவையகத்தே. 51

## வாழ்க்கைச் செல்வங்கள் சிறக்க

வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலைஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யும் தவம் உடையார்க்குளவாகிய சின்னங்களே. 52

## தவத்தின் உயர்வு காண

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரியமுலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரியகுழலும் கண்மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப்பார்க் கிதுபோலும் தவமில்லையே. 53

## வறுமை நீங்க

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரைபாதங்கள் சேர்மின்களே. 54

## பற்ற நிலையடைய

மின்னாயிரம் ஒருமெய் வடிவாகி விளங்குகின்ற(து)
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னா(து) ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றிலையே 55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அனைவரையும் தன்பால் ஈர்க்க

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து) இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீக்கிநிற்பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப்பொருள் அறிவார்
அன்றா(ல்) இலையில் துயின்ற பெம்மானும் என்ஐயனுமே 56

### பொருள் தேடிப் பிறரைச் சாராதிருக்க

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்(டு) அண்டம் எல்லாம்
உய்ய அறம் செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப்பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்றன் மெய்யருளே 57

### மனம் அமைதி பெற

அருணாம் புயத்தும் என்சித்தாம்புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம்புயமுலைத் தையல்நல்லாள் தகைசேர் நயனக்
கருணாம் புயமும்வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம்புயமும் அல்லாற் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே 58

### நல்லொழுக்கம் உடைய மக்களைப்பெற

தஞ்சம் பிறிதில்லை ஈதல்லதென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம்பயிலநினைக் கின்றிலேன் ஒன்றை நீள் சிலையும்
அஞ்சம்பும் இக்(கு) அலர் ஆக நின்றாய் அறியார் எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடியார் அடியார்பெற்ற பாலரையே 59

### மெய்யறிவு விளங்க

பாலினும் சொல்இனியாய் பனிமாமலர்ப் பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றைவார் சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடமொரு
நாலினும் சாலநன்றோ அடியேன்முடை நாய்த்தலையே 60

### நம்மை நாமே அறிந்து உய்ய

நாயேனையும் இங்(கு) ஒருபொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்னபேறு பெற்றேன்
தாயே மலைமகளே செங்கண்மால் திருத்தங்கைச்சியே 61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்ச உணர்வு நீங்க

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும் எப்போதும் என்சிந்தையதே 62

## நல்லறிவு பெற

தேறும் படிசில ஏதுவும்காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றில் கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே 63

## மனம் ஒருநிலைப்பட

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒரு பொழுதும் திருமேனிப் பிரகாசமன்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே 64

## மக்கட் செல்வம் விளங்க

ககனமும் வானும் புவனமும் காணவிற்காமன் அங்கம்
தகனமுன் செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனுந் நான்கிருமூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன்றோ வல்லிநீ செய்த வல்லபமே 65

## வித்தைகள் விளங்க

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின்மலரடிசெம்
பல்லவம் அல்லது பற்றொன்றிலேன் பசும்பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே 66

## குலப்பெருமை காக்க

தோத்திரம் செய்து தொழுதுமின்போலும் நின்தோற்றம் ஒரு
மாத்திரைப்போதும் மனத்தில் வையாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழலா நிற்பர் பாரெங்குமே 67



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இன்பங்களைத் துய்க்க

பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூறொளி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாமசுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடை யார்படையாத தனமில்லையே 68

### பெறற்கரிய பேறு பெற

தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே 69

### இசையில் புலமை எய்த

கண்களிக்கும் படி கண்டு கொண்டேன் கடம்பா அடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும்கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமுமாகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே 70

### மனம் உறுதியடைய

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பாதாம்புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமளை யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே இரங்கேலுனக்(கு) என்குறையே 71

### பிறவித்துயர் நீங்க

என்குறை தீரநின்(று) ஏத்துகின்றேன் இனியான் பிறக்கின்
நின்குறையேயன்றி யார்குறை காண்இரு நீள் விசும்பின்
மின்குறை காட்டிமெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீர எங்கோன் சடைமேல் வைத்த தாமரையே 72

### மங்கையர்க்கு மணவாழ்வு பெற

தாமம் கடம்பு படைபஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வைரவர் ஏத்தும் பொழு(து) எமக் கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு) ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே 73



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொழிலில் சிறக்க முதன்மைபெற

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும் பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே 74

### விதியை முறியடிக்க

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்த உந்திக்
கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே 75

### உரிமைகளை நிலைநாட்ட

குறித்தேன் மனத்தில் நின் கோலம் எல்லாம் நின்குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பைரவியே 76

### பகைக்கு அஞ்சாதிருக்க

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்கண்டிகாளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினிசூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே 77

### அஷ்ட போகங்களையும் அடைய

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக்குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதி வைத்தேன் என் துணைவிழிக்கே 78

### சிற்றினம் சேராதிருக்க

விழிக்கே அருளுண்(டு) அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு) அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்களேசெய்து பாழ்நகரக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடென்ன கூட்டினியே 79



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லையில் மகிழ்ச்சி பெற

கூட்டியவா என்னைத் தன்னடியாரில் கொடிய வினை
ஓட்டியவா என்கண் ஓடியவாதன்னை உள்ளவண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடம் ஆடகத் தாமரை ஆரணங்கே 80

## நற்பண்புகள் வளர

அணங்கே அணங்குகள் நின்பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் என(து) உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றிலேன் என்கண் நீ வைத்த பேராளியே 81

## மறதியைப் போக்க

அளியார் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுந்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக்கரை புரண்டு
வெளியாய் விடின்எங்ஙனே மறப்பேன்நின் விரகினையே 82

## அடைய முடியாதவற்றை அடைய

விரவும் புதுமலர் இட்டுநின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக்காவும் உடையவளே 83

## சங்கட நிலைகளினின்றும் விடுபட

உடையாளை ஒல்குசெம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள் பெம்மானிடையாளை இங்(கு) என்னைஇனிப்
படையாளை உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே 84

## தீவினை அகல

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும முலையும் முலைமேல் முத்துமாலையுமே 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படைக்கருவிகளால் தீங்கு நேராதிருக்க

மாலயன்தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே 86

### செயற்கரிய செய்ய

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திருமூர்த்திஎன்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால்மதனை
அழிக்கும் தலைவர்அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாதங் கொண்டாளும் பராபரையே 87

### அம்மையின் அருள்பெற

பரமென்று உனையடைந்தேன் தமியேனும் உன்பக்தருக்குள்
தரமன்று இவன் என்று தள்ளத்தகாது தரியமலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கியபோதின்அயன்
சிரம் ஒன்று செற்றகையான் இடப்பாகம் சிறந்தவளே 88

### யோகசித்தி அடைய

சிறக்கும் கமலத் திருவேநின்சேவடி சென்னி வைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயிர்உறவற்றறிவு
மறக்கும் பொழுதென் முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே 89

### பிரிந்தவர் கூட

வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியளே 90

### மன்றத்தமர்ந்து கோலோச்ச

மெல்லிய நுண்ணிடை மின்அனையாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனையாளைப் புகழ்ந்து மறை
சொல்லியவண்ணம் தொழும் அடியாரைத் தொழும்அவர்க்கு
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதந்தருமே 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனப்பக்குவம் அடைய

பதத்தே உருகி நின் பரதத்திலேமனம் பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய் இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர்போன வழியும் செல்லேன்
முதற்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே 92

## ஞான ஒளி துலங்க

நகையே இஃதிந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலைமானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறுவியும் வம்பே மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள் தன் தகைமையை நாடி விரும்புவதே 93

## மனநோய்கள் தீர

விரும்பித்தொழும் அடியார் விழிநீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடுமாறி முன்சொன்ன எல்லாம்
தரும்பித் தர ஆவரென்றால் அபிராமி சமயம் நன்றே 94

## ஆண்டவனைச் சரணடைய

நன்றே வருகினும் தீதெவிளைகினும் நான்அறிவ(து)
ஒன்றேயு மில்லை உனக்கேபாரம் எனக்(கு) உள்ள எல்லாம்
அன்றே உனதென்(று) அளித்து விட்டேன் அழியாதகுணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே 95

## தாழாத கீர்த்தி அடைய

கோமள வல்லியை அல்லியந்தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதும் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலகலாமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே 96

## தருமம் தழைக்க

ஆதித்தன் அம்புலி அங்கிகுபேரன் அமரர் தங்கோன்
போதிற் பிரமன் புராரிமுராரி பொதியமுனி
காதிப்பொருபடைக்கந்தன் கணபதி காமன் முதல்
சாத்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வஞ்சனைகளினின்றும் விடுபட

தைவந்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் கலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறியா மடப்பூங்குயிலே 98

### பக்திப்பெருக்கில் நம்மை மறக்க

குயிலாய் இருக்கும் கடம்பாடவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலாயருக்(கு) அன்(று) இமவான் அளித்த கனங்குழையே 99

### சரணம் அடைய வழி

குழையைத் தழுவிய கொன்றையந்தார்கமழ் கொங்கை வல்லி
கழையைப்பொருத திருநெடுந்தோளும் கரும்பு வில்லும்
விழையப் பொருதிறல் வேரியம்பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே
100

### நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவி அடங்கக்
காத்தாளை அங்குசபாசங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்(கு) ஒரு தீங்கில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கைலாசப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்களின்
## வாழ்க்கை வரலாறு

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார் - திருக்குறள்

மருதடி விநாயகப் பெருமானின் மூலவிடமாகவும், இயற்கை அன்னையின் கொடையான மண்வளத்தையும் தன்னகத்தே கொண்ட மானிப்பாய் மாநகரின் சைவ வேளாளர் குலத்தில் மலாயன் பென்சினியர். கைலாசபிள்ளை அன்னமுத்து தம்பதிகளுக்கு 05.06.1954 ஆண்டு கனிஷ்ட புத்திரராக பூமியில் அவதரித்தார். இவர் உடன்பிறந்தோர் காலம் சென்ற விக்கினராசா, காங்கேசன், காலம் சென்ற தனபாக்கியம், இராசலஷ்மி, தியாகராசா, இராசநாயகம், கணேசலிங்கம்.

அவர் தனது ஆரம்பகல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்றபின், 1974ம் ஆண்டு உயர்கல்வி பயில லண்டன் புறப்பட்டார். லண்டனில் Automobil Enginineer பட்டத்தை பெற்றார். பின்னர் தனது தாய் நாடு திரும்பி அங்கே "Linka Electricals" என்ற பெயரில் சொந்த தொழில் (Own Business) புரிந்தார். அவர் தனது Business இல் Tube lights யும் Hot plates யும் Manufacture செய்தார்.

இவர் 1982ம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநகரில் வாழ்ந்த மாண்புமிகு பண்டிதர் திரு நவரத்தினம் வள்ளிநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி கலாவதி (Bio Medical Scientist) அவர்களை தன் வாழ்க்கை துணைவியாகக் கொண்டு வளமான இல்லறத்தை நடத்தினார.

"தக்கார் தகவிலர் என்பது அவர் தம்
எச்சத்தால் காணப்படும்" என்றார் வள்ளுவர்.

இதற்கு இணங்க சுந்தரலிங்கம், கலாவதி இல்லறச்சோலையில் இனிதே மலர்ந்தார்கள். இரண்டு மக்கட் செல்வங்கள் மூத்தவர் மகள் சுஜீவா, இளையவர் மகன் கோகுலரமணன். இருவரையும் தனது அன்பின் ஆதரவினாலே கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். இந்தக் காலகட்டத்தில் நாட்டு நிலைமை காரணமாக அவர் தனது மனைவி, பிள்ளைகளுடன் லண்டன் வந்து சேர்ந்தார்.

மகள் சுஜீவா மருத்துவ பட்டத்தையும்(Dr) மகன் கோகுலரமணன் கலாநிதி (Dr) பட்டத்தையும் பெற்றார்கள். அவர் தனது இரண்டு பிள்ளைகளினதும் உயர்கல்வி முன்னேற்றத்தில் பூரண மனநிறைவைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அன்பு மகள் சுஜீவாவை மல்லாகத்தை பதியாகக் கொண்ட திரு. பிரதீபன் (Former Director of Social Services) உஷா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் Dr ரூபன் (மருத்துவ பட்டதாரி) என்பவருக்கு திருமணம் செய்து வைத்தார். அவர்களது இல்லறதர்மத்தின் விளைவாக பெற்ற குழந்தைச் செல்வமான கீசனை அன்புப் பேரனாக பெற்று மனம் மகிழ்ந்தார்.

தனது அன்பு மகன் கோகுலரமணனை Professor Nick Stafford, Dr Heather தம்பதிகளின் இரண்டாவது புதல்வி Verity(Dr) என்பவருக்குத் திருமணம் செய்து வைத்தார்.

"மங்களம் என்பது மனமாட்சி அதன் நன்கலம்
நன் மக்கட்பேறு" இது வள்ளுவர்.

அவர் தனது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை எல்லோருடைய அன்பையும் ஆதரவையும் நிறைவாகப் பெற்றார்.

எங்கள் அன்புக்கும் பாசத்திற்கும் உரிய அமரர் கைலாசபிள்ளை சுந்தரலிங்கம் அவர்கள் தனது வாழ்க்கைக் காலத்தில் அழியாத புகழுடனும், என்றும் மலர்ந்த முகத்துடனும், எல்லோரிடமும் பூரண அன்புடனும், பண்புடனும் வாழ்ந்து, தன்னை நாடியவர்களுக்கு முடிந்த வகையில் அறிவுரைகள் வழங்கியும் உதவிகளைப் புரிந்தும் எல்லோர் மனதிலும் நீங்காத நினைவுப் பதித்துக் கொண்டார்.

அவர் தனது வாழ்க்கை காலத்தில் பல ஆன்மீக பணிகளிலும் ஈடுபட்டு வந்தார். மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் தர்மகர்த்தா சபை உறுப்பினராக இருந்தார். மருதடி விநாயகர் ஆலய திருப்பணியில் அம்மன் கோவிலை உருவாக்கும் பொறுப்பை ஏற்றார்.

இப்படியாக வாழ்ந்த காலத்தில் 2016ம் ஆண்டு சுவாச சம்பந்தப்பட்ட நோய்வாய்ப்பட்டு இருந்தார். பின்னர் 2017ம் ஆண்டு தை மாதம் 25ம் திகதி புதன்கிழமை வந்த வேலையை இனிதே முடித்து முடியாத இறையின்பம் எய்தினார்.


வாழ்க அவர் நாமம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு கைலாசபிள்ளை சுந்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரலிங்கம் அவர்களின் வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் நினைவிலிருந்து.........

வாழ்க்கையின் தத்துவத்தையும், வாழ்வதற்கான மனவலிமையும் எனக்களித்து என் வாழ்விற்கு ஒளியேற்றிய தீபமே!

மழலைகள் இரண்டு அளித்து மகத்துவமாய் அவனியிலே அன்னை எனும் பதவி தந்து வாழ வைத்த தெய்வமே!

உங்களுக்கு கிடைக்கும் நேரத்தில் என்னை என் வேலை இடத்திற்கு அழைத்து செல்வீர்களே. பின் வீட்டிற்கு அழைத்து வருவீர்களே. சில சமயம் நான் வேலை முடித்துவர தாமதமாகினாலும் மனம் கோணாது என்னை கண்டதும் மலர்ந்த முகத்துடன் வரவேற்பீர்களே.

எங்கள் வாழ்க்கை ஆரம்பித்த காலம் தொட்டு என்ன விசயமாக இருந்தாலும் "அது கலா பார்த்துக் கொள்ளும்" என்று சொல்லி நிம்மதியாக இருப்பீர்களே. காதல் எனும் மூன்றெழுத்தின் ஆழத்தை அழகாக வாழ்க்கையிலே எனக்கு உணர்த்தினீர்களே.

2016ம் ஆண்டு உங்களுக்கு சுவாச சம்பந்தமான கடும்நோய் வந்த அந்தக் காலத்தில் நானும் வேலையிலிருந்து ஓய்வு பெற்று உங்கள் பக்கத்தில் இருந்து கவனித்து உங்களை எப்படியும் குணப்படுத்திவிடுவேன் என்ற பூரண நம்பிக்கையோடு கண்விழித்துப் பார்த்திருந்தேனே. விதி மதியை வென்று விட்டதே. என்னால் நம்ப முடியவில்லையே. என்றும் இணைபிரியாது இருந்த நீங்கள் எப்படி என்னைப் பிரிந்து இறைவனடி சேர்ந்தீர்கள். உறக்கமின்றி தவிக்கின்றேனே. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அன்னையை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மனைவி

(கலா)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Dearest Appa

My Appa was a kind, happy, sociable man. He made friends wherever he went and loved to chat to everyone. He was liked by all.

I have so many loving memories of dad. He has been in every stage of my life, so now to think he isn't going to be there anymore just doesn't make sense. I remember him telling Ramana and I stories whilst feeding us food when we were 2 and 3 years old back in Manipay. He had a talent for story-telling and we loved listening. He taught us all the Hindu stories. He would drive us to wherever we needed to go at the drop of a hat. I didn't know how to use public transport until I was 18 years old because of dad. He was very protective over me as I was his only daughter. It makes my heart ache when I think about some of the efforts he made for me.

One example is how dad drove me to Southampton (115 miles) every Sunday, with mum on the passenger seat and then they would drive back home on the same night. They did this for the whole 6 years that I was at university. He always wanted the best for Ramana and I. He would never let anyone harm us. One of my fondest memories of dad is when he and mum gave me away at my wedding. Other beautiful memories I will always have engraved in my heart are of the times appa spent with my son Keishan. Keishan got to spend 1 year with him, and grew to love his Ammappa very much.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appa would admire Keishan's laughter and then respond by saying 'இது தெய்வீக சிரிப்பு' and this would make Keishan laugh some more.

He and Amma met each other when they were studying at Manipay Hindu College. They were very fond of each other. He always needed mum by his side, from the day they met to the day he left us. She was his strength and support. Thirty years after they'd met, this strength and support he had from mum extended to an extraordinary level. He became fully dependent on mum in the last year of his life.

